**தீபகத்திலிருந்து...**

**இறையாசீர்.**

புத்தாண்டிலே நுழைந்துள்ளோம். புத்தாண்டு என்பது ஒரு புது தொடக்கம். புதிதாய் தொடங்குவது என்பதே அழகானதொரு அனுபவம். புதிய ஆடையை அணியும்போது நமது உள்ளத்தில் ஒரு சின்ன புன்சிரிப்பு. புதிய புத்தகத்தை திறந்து பார்த்து அதை முகந்து பார்க்கும் குழந்தையின் மனம். புதியதொரு வீட்டிலே நுழைந்த குடும்பம் அந்த புதுத்தரையின் சில்லென்ற தன்மையை உணரும் மகிழ்ச்சி. இவையெல்லாமே புதிய தொடக்கத்தின் அனுபவங்கள். புத்தாண்டும் அப்படியே. கசப்பான அனுபவங்கள், கடினமான தருணங்கள், கண்கலங்க செய்த நேரங்கள் என பலவற்றோடு பழைய ஆண்டு நகர்ந்து புத்தம் புதியதொரு ஆண்டிற்கு வழிவிட்டுள்ளது. நேர்மறை எண்ணங்களோடு, எதிர்நோக்கோடு, முடியும் என்ற எண்ணத்தோடு, புதியதொரு தொடக்கத்தை நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதே அழைப்பு. நமது அன்றாட வாழ்வு, கடமைகள், உறவுகள் இவற்றின் மத்தியில் நமது வாழ்வு எந்தளவு பொருளுள்ளதாய் அமைந்துள்ளது என்று சீர்த்தூக்கி பார்க்கவும், குறைகளை கண்டறியவும், நிறைகளை நிரந்தரமாக்கவும், வாழ்வின் உண்மை பொருளை உணர்ந்து வாழும் தன்மையில் இன்னும் ஒருபடி ஆழப்படவும் நம்மை அழைக்கிறது.

இவ்வாண்டின் விருதுவாக்காக சலேசிய சபைத்தலைவர் ஆங்கேல் ஆர்த்திமே பெர்ணாண்டஸ் முன்னிறுத்தும் கருத்து:

**நாம் ஒரே குடும்பம் ஒவ்வொரு இல்லமும் வாழ்வின் அன்பின் கல்விக்கூடம்.** நம் குடும்பங்கள் அன்பின் ஆலயங்களாக, நிறைவாழ்வின் பயிலகங்களாக மாறவேண்டும் என்று அழைக்கிறார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மனதின்படியே, அன்பின் மகிழ்ச்சி என்ற தனது சுற்றுமடலில் அவர் விடுத்துள்ள அழைப்பின்படியே சலேசிய சபைத்தலைவரும் இக்கருத்தை முன் வைக்கிறார். திருக்குடும்பத்தின் திருவிழாவை இப்போதுதான் கொண்டாடி முடித்தோம். அருள்மிகு அந்த குடும்பத்தின் ஆசீர் நாடுவோம். நம் குடும்பங்களை நாம் வாழும் சூழல்களில் கலங்கரை விளக்கங்களாக்குவோம்.

இறைவனின் ஆசீர் இவ்வாண்டு முழுவதும் உங்களோடும் உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரோடும் நிறைவாக இருப்பதாக.

அன்புடன்

பணி. அந்தோணி கிறிஸ்டி சச.

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

| | |
|---|---|
| 01.01.2017 | தூய கன்னிமரியா இறைவனின் தாய் பெருவிழா - திருப்பலி |
| 05.01.2017 | தூய ஜான் நியூமன் - திருப்பலி |
| 08.01.2017 | திருக்காட்சிப் பெருவிழா - திருப்பலி |
| 09.01.2017 | இயேசுவின் திருமுழுக்கு திருவிழா - திருப்பலி |
| 14.01.2017 | அருளாளர் தேவசகாயம் - திருப்பலி |
| 15-01-2017 | பொங்கல் திருவிழா - திருப்பலி |
| 16.01.2017 | அருளாளர் ஜோசப் வாஸ் - இலங்கை - திருப்பலி |
| 20.01.2017 | தூய செபஸ்தியார் திருவிழா - திருப்பலி |
| 21.01.2017 | தூய ஆஞ்ஞேஸ் (தூய ஆக்னேஸ்) - திருப்பலி |
| 22.01.2017 | ஆண்டின் பொதுக்காலம் 3ம் ஞாயிறு - திருப்பலி |
| 25.01.2017 | தூய பவுல் மனமாற்றம் - திருப்பலி |
| 26.01.2017 | தூய திமொத்தேயு மற்றும் தூய தீத்து - திருப்பலி |
| 28.01.2017 | தூய தாமஸ் அக்குவினாஸ் - திருப்பலி |
| 29.01.2017 | ஆண்டின் பொதுக்காலம் 4ம் ஞாயிறு - திருப்பலி |
| 31.01.2017 | தூய ஜான் போஸ்கோ நினைவு விழா - திருப்பலி |

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

1. புத்தாண்டில் புது வாழ்வு நோக்கி
2. தூய தொன் போஸ்கோவின் வாழ்வில் மரியன்னை
3. அருளாளர் தேவசகாயம் - இன்று தரும் பாடங்கள்
4. திருச்சபை செய்திகள்

**01.01.2017 தூய கன்னிமரியா இறைவனின் தாய் பெருவிழா திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

"இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்"

**முன்னுரை**

2017ம் ஆண்டு புது விடியலின் வெள்ளிக் கீற்றாய் ஒளிர வருகையில், நாம் உரிய தயாரிப்புடன் வரவேற்போம். கன்னிமரியா இறைவனின் தாய் என மரியாவைப் போற்றியும், இயேசு என்னும் பெயரால் முதன் முதலாக அழைக்கப்பட்ட இறைமகனாம் இயேசுவைப் புகழ்ந்தும், களிப்புறும் நாள் இது. இவ்வாண்டின் துவக்கத்திலே எண்ணாகமம் 6:24-26இல் கூறப்பட்டது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு இறையாசீரும், அருளும் பொழியப்படுவதை உணர்கிறோம். இப்படிப்பட்ட அருளும் ஆசீரும் ஆனந்தமும் இன்று மட்டுமிருந்து நாளை மறைந்து விடக்கூடியவை அல்ல. அப்படி மறைந்து விடும்படி நாம் நடந்து கொள்வதும் கூடாது. அன்னை மரியா போன்றே வாழ்வில் இறைவன் நமக்கு அருளும் கொடைகளை, அவர் நமக்கு செய்த நன்மைகளை, அவர் நமக்குக் காட்டும் வழிகளை மறந்துவிடாமல், அவற்றையே வாழ்நாள் முழுவதுமாகக் கடைப்பிடித்து நல்லதொரு வாழ்வை வாழ்ந்திட உறுதி கொள்வோம்.

பிறந்துள்ள 2017ம் ஆண்டானது நமக்கு மட்டுமல்ல, இவ்வுலக மாந்தர் அனைவரது வாழ்விலும் அமைதியை, நிறைவை, மகிழ்வைத் தரக்கூடிய ஆண்டாக விளங்கிட நமக்காக என்றும் பரிந்துரைக்க தயாராக இருக்கும் நம் இறைவனின் அன்னையான மரியாவின் மூலமாக இறைமகன் இயேசுவிடம் செபிப்போம். கடந்த ஆண்டு நடைபெற்ற வன்முறைகள், கசப்பான நிகழ்வுகள் பிறந்திருக்கும் புத்தாண்டில் நேராமல் இருக்க இறைவன் துணைபுரியவேண்டுமென்று மனதார மன்றாடுவோம். இவ்வாண்டு, நாம் வாழும் இப்புவியை கடும் இயற்கை சீற்றங்களினின்று கடவுள் காத்தருளுமாறும், தேவையான பருவ மழையையும் நல்ல விளைச்சலையும் தந்து நம் அனைவரையும் தம் அருளினால் நிரப்புவராக என்று இப்புதிய ஆண்டின் துவக்கத்தில் செபித்தும், நமது புனித வாழ்வுக்குத் தடையாயுள்ள தவறான சிந்தனைகள், கொள்கைகள், மதிப்பீடுகள், அணுகுமுறைகள், உறவுமுறைகள், செயல்பாடுகள் இவற்றை இனங்கண்டு வேரறுத்து ஒதுக்கி, நம் வாழ்வில் அன்பு, அருள், தூய்மை, வாய்மை, நேர்மை, சேவை, தியாகம், அர்ப்பணிப்பு போன்ற நற்பண்புகளால் அலங்கரித்து வாழ்வோம் என உறுதியளித்து, பக்தியோடு இன்றைய புத்தாண்டுத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நான் உங்களுக்கு ஆசி வழங்குவேன் எனக்கூறிய இறைவா, கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தும் எம் நேசமிகு திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தத்தம் பணிகளுக்கேற்ப பொறுப்புகளையும் பகிர்ந்து செய்யும் ஆட்சியாளர்கள் தங்கள் பணிகளை பொதுநிலையினரிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்து அவர்களை ஊக்கப்படுத்தவும் அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.
2. என்றென்றும் வாழும் இறைவா, எங்கள் வாழ்க்கையில் பணம், பதவி, அதிகாரம் இவற்றைக் கொண்டு சாத்தான் சோதிக்க வரும்போது அச்சோதனையில் வீழ்ந்துவிடாமல் பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உரிமைப் பேற்றைத் தந்த உத்தமரே இறைவா, நீர் எங்களுக்கு அன்றாடம் செய்துவரும் நன்மைகளுக்கு நன்றி செலுத்தவும், இந்த நம்பிக்கையின் பலன்களை எங்கள் பிள்ளைகளுக்கு கற்பித்து ஞானவாழ்வில் அவர்களை வளர்க்கவும் அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

**05.01.2017 தூய ஜான் நியூமன் திருப்பலி**

**முன்னுரை** **திரு. ஜான் சுரேஷ்**

இறை இயேசுவில் பிரியமான இறைமக்களே, இன்று நம் தாய் திருச்சபையானது தூய ஜான் நியூமன் அவர்களின் திருவிழாவை கொண்டாட அழைப்பு விடுக்கிறது.

பொசிமியாவில் உள்ள பிராகட்டிஸ் என்னும் இடத்தில் 1811, மார்ச் 28ல் பிறந்தார். யோவான் நெப்டமுசீன் என்னும் புனிதரின் பெயரை இவருக்கு இவர் பெற்றோர் சூட்டினார்கள். இளமை முதலே

படிக்கும் பழக்கத்தை கொண்ட நியூமனை அனைவரும் புத்தக புழு என்றும் புத்தக பைத்தியம் என்றும் அழைத்தனர். சிறுவயதில் தாயுடன் தினமும் கோவிலுக்கு செல்லும் பண்பை கொண்டதால், அனைத்து செபங்களையும் விரைவாக கற்றார். 1831ல் மறைமாவட்டக் குருமடத்தில் சேர்ந்தார். 1836ல் திருப்பொழிவு பெற்றார். குறைந்த நேரமே தூங்கினார். இதனிடையே உலக மீட்பரின் துறவற சபையில் 1840 நவம்பர் 30ம் நாள் சேர்ந்தார். 1842ல் வார்த்தைப்பாடு கொடுத்தார். "மக்கள் புனிதராக" இருந்த இவர் மக்களின் தேவைகளையும் உணர்ச்சிகளையும் புரிந்து கொண்டு பணியாற்றினார். மக்கள் இறைவனின் உடனிருப்பை காண 80 ஆலயங்கள் நிறுவினார். அருள் சகோதரிகளுக்கான புனித பிரான்சிஸ் மூன்றாம் சபையை உருவாக்கினார். 1860 ஜனவரி 5ம் தேதி அருள்தந்தை உர்பான் செக்கிடம், "வெளியில் சென்று இதமான காற்றை சுவாசித்தால் நான் நலமாகிவிடுவேன், கவலைபடாதீர்கள், எங்கே? எப்போது? இறப்பு வரும் என்பது கடவுளது திருவுளம் நாம் அதற்கு தயாராக இருக்க வேண்டும்" என்று நடக்க ஆரம்பித்தார். நடந்து கொண்டே இருக்கும்போது தடுமாறி விழுந்தார். அவர் சொன்னபடி இறைவன் திருவுளத்தை ஏற்றார். 1963ல் அருளாளராகவும் 1977ல் புனிதராகவும் திருத்தந்தை 6ம் பவுல் உயர்த்தினார். இவர் முதல் அமெரிக்க ஆயர் ஆவார். விடா முயற்சியும், பிறர் நலம் தேடுதலும், நம்மில் நிறைய இறைவனிடம் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம், இறையருள் பெறுவோம்.

**விசுவாசிகள் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, எங்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் ஆகிய அனைவரும் மீட்பு அண்மையில் உள்ளதை உணர்ந்தவர்களாக, எங்களை மீட்பளிக்கும் ஒளியாம் இயேசுவின் பாதையில் வழிநடத்திட வேண்டிய அருளை அளித்தருள வேண்டுமென்று தூய ஜான் நியூமன் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. நன்மைகளின் நாயகனே இறைவா, இத்திருப்பலியில் கலந்து கொண்டுள்ள இறைமக்கள் யாவரையும் ஆசீர்வதிப்பீராக, இவ்வுலக வாழ்வில் உமது இறைவார்த்தையை படித்து வாழ்வாக்கவும், அயலாரோடு நல்லுறவில் வளர்ந்து இருப்பவற்றை இல்லாதவரோடு பகிர்ந்து உமது சாட்சிகளாக வாழ்ந்திட வரம் அருள தூய ஜான் நியூமன் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. ஞானத்தின் இருப்பிடமே எம் இறைவா, கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவிகளையும் உம் பாதம் சமர்ப்பிக்கிறோம். இவர்களுக்கு நல்ல கல்வி ஞானத்தை வழங்கி சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் ஏற்ற பிள்ளைகளாக வளர வேண்டுமென்று தூய ஜான் நியூமன் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**08.01.2017 திருக்காட்சிப் பெருவிழா திருப்பலி**

திரு. ஹென்றி ஸ்டீபன்

**முன்னுரை**

இன்று திருக்காட்சி விழாவின் திருவழிப்பாட்டு நற்கருணை கொண்டாட்டத்திற்கு வருகை தந்திருக்கும் அன்பர்களே, இயேசுவின் பிறப்பை உலகிற்கு அறிவிக்க இறைவன் இரண்டு தூதுவர்களை உலகின் இருவகையான நிலையில் இருந்த மனிதர்களுக்கு அனுப்புகின்றார். கல்வி அறிவற்ற, ஒதுக்கப்பட்ட, கடைநிலை மக்களான இடையர்களுக்கு ஒரு தூதுவரை அனுப்பினார். விண்மீன் தோன்றச் செய்து தனிச்சிறப்பு பெற்ற ஒளியுடன் அதை உலவ செய்து ஞானிகள் மூவருக்கு மீட்பரின் பிறப்பைப்பற்றி தூது விடுக்கின்றார். "யாக்கோபிலிருந்து ஒரு விண்மீன் உதிக்கும்" (எண்24:17) "பிற இனத்தார் உன் ஒளி நோக்கி வருவர்" (எசா60:3) ஆகிய இறைவாக்குகளுக்கு ஏற்ப இயேசு பாலனை வணங்க தேடி வந்தனர் ஞானிகள் மூவர்.

தம் இனத்திலேயே பிறந்த இயேசுவை இனம் கண்டுக்கொள்ள தவறிய யூத இன மக்களைவிட, ஞானிகள் இங்கு உயர்ந்து விளங்குகின்றனர். தாங்கள் எவ்வளவுதான் மேதைகளாக, அறிஞர்களாக இருந்தாலும் பல இன்னல்களை கடந்து தியாக உள்ளத்தோடு படைப்பின் பரம்பொருளான இறைவனை தரிசிக்க தேடி வந்த இந்நாளை திருச்சபை மகிழ்ந்து கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இயேசுவை அறியாத பிற மக்களுக்கும் மீட்பு உண்டு என்பதே இந்நாளின் பெருவிழாவின் மையக்கருத்து. ஞானிகள் அரசர், ஆண்டவர், மீட்பர் என்பதை உணர்த்தும் மூன்று காணிக்கைப் பொருட்களை அளித்ததுப்போல்

நாமும் விசுவாசம், அன்பு, சேவை நிறைந்த வாழ்க்கையை அரசரான இயேசுவுக்கு மிக சிறந்த பரிசாக அளிப்போம். இறை திட்டத்திற்கு ஏற்ப புதிய நம்பிக்கை உற்சாகத்துடன் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, உம் திருமகன் பிறப்பினால் உலக மக்கள் அனைவருக்கும் அவரை அரசர் என்ற மாட்சியையும், மகத்துவத்தையும் வெளிப்படுத்திய நிகழ்ச்சியை திருக்காட்சி பெருவிழாவாக கொண்டாடும் இந்நாளில் அவரே உண்மையும், நீதியுமான அரசர் என்று எல்லா நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ள நல்ல மனதை தர உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, அமைதிப்பணி, பிறரன்புப்பணி, சமூகப் பணிகளை செய்து வருகின்ற நல்ல நெஞ்சங்களை ஆசீர்வதித்து இப்பணிகளுக்கு தடையாக வரும் தோல்வி, எதிர்ப்பார்புகள், ஏமாற்றங்கள், சோர்வுகள் ஆகியவற்றை நீக்கி உற்சாகத்தோடு குறிக்கோளை அடைய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணையே உருவான இறைவா, தேடி வந்த கீழ்த்திசை ஞானிகளுக்கு உம்மையே வெளிப்படுத்திய இயேசுவே, நாங்களும் எங்கள் அன்றாட வாழ்வில் நற்செயல்கள் வழியாக உம்மை தேடி கண்டிடவும் அதன் மூலம் மகிழ்ச்சியும், மனநிறைவும் பெற வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. வாழ்வளிக்கும் இறைவா, எங்களிடையே ஏற்ற தாழ்வு நீங்கி உம்மையே உரிமை சொத்தாக ஏற்றுக் கொண்டு, ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர் ஆகியோரை ஆதரித்து உதவிடவும் அதன் மூலம் உமது சாட்சியாக வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

**09.01.2017 இயேசுவின் திருமுழுக்கு திருவிழா திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறை இயேசுவில் இனிய மக்களே, இன்றைய தினம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்குப் பெருவிழாவை சிறப்பிக்கின்றோம். மூவொரு இறைவனின் பிரசன்னத்தில் திருமுழுக்கு பெற்றிருக்கும் நமக்கு முன் மாதிரியாக திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற வருகின்றார் நம் ஆண்டவர் இயேசு. இதையறிந்த யோவான் "நான் தான் உம்மிடம் திருமுழுக்கு பெற வேண்டியவன். நீரா என்னிடம் வருகிறீர்" என்று தடுக்க, அதற்கு இயேசு தந்தையாகிய கடவுளுக்கு ஏற்புடைய அனைத்தையும் நாம் நிறைவேற்றுவது தான் முறை என்று பதிலளிக்க, யோவான் இசைந்து இயேசுவுக்கு திருமுழுக்கு அளிக்கிறார். அந்நேரம் வானம் திறந்ததையும், கடவுளின் ஆவியானவர் புறா வடிவில் தம்மீது இறங்குவதையும், "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று ஒரு குரல் எழும்புவதையும் நாம் படிக்கின்றோம்.

முதல் பெற்றோரின் பாவத்தால் மனுக்குலம் முழுவதும் பாவத்தால் மூழ்கி இறைபிரசன்னம் இல்லாதவர்களாக இருக்கும் நிலைமாறி ஒவ்வொரு மனிதரும் கடவுளின் பிள்ளைகளாக மாற மீட்பு பெறுவதன் அடையாளமே திருமுழுக்கு. இயேசு பாவம் அறியாதவர் என்றாலும் தம்மையும் பாவிகளோடு ஒப்புமைப்படுத்தி திருமுழுக்கு பெறுகிறார். திருமுழுக்கு என்னும் அருளடையாளம் நாம் மீண்டும் ஆண்டவரோடு இணைய வழிவகுக்கின்றது. திருமுழுக்கினால் நாம் கடவுளின் பிள்ளைகள் என்ற நினைவு நம்மை நிலை நிறுத்தும் என்ற சிந்தனையோடு இப்பெருவிழாவை கொண்டாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. வாழ்வு தரும் இறைவா, எங்கள் உலகியல் வாழ்வில் மாற்றங்கள் நிகழும் போதும், பேரிடர் வரும் சமயங்களிலும் வாழ்வாதாரம் நிலைகுலையும் போதும் உம் துணைக் கொண்டு எல்லாவற்றையும் வெல்ல உம் ஒப்பற்ற வல்லமையை எங்கள் மேல் பொழிய வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு தந்தையே இறைவா, உமது அன்பை ஆழமாக உணர்ந்து, அதை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து வாழும் இதயத்தையும் அளித்து உமது அன்பின் பிரசன்னம் உலகெங்கும் பரவவும் மக்களனைவரும் ஒகரே குலமாக உம்மிடம் வரும் தகுதியை எமக்களிக்கவும் உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் இறைவா, "இவரே என் அன்பார்ந்த மகன்" என்று உம் திருமுழுக்கில் கேட்ட குரல் எம் ஒவ்வொருவர் வாழ்விலும் கேட்கும்படியான சாட்சியமிகுந்த வாழ்க்கையை வாழும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**14.01.2017 அருளாளர் தேவசகாயம் திருப்பலி**

**திரு. ஜான் சுரேஷ்**

**முன்னுரை**

இறையேசுவில் பிரியமானவர்களே, நாம் பெருமைப்பட வேண்டிய நாள் இன்று. ஏனென்றால் தேவசகாயம் பிள்ளை தமிழகத்தின் அருளாளரும் இந்தியாவின் முதல் பொதுநிலையினர் மறைசாட்சியும் ஆவார். இவர் தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டாலம் என்னும் கிராமத்தில் இந்து குடும்பத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் நீலகண்ட பிள்ளை. செல்வ செழிப்பான குடும்பம் என்பதால் அரச குடும்பத்தில் எளிதாக பழகுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதன்மூலம் போர்வீரர், கோவில் பணியாளர், அரச கருவூல அலுவலர் என்று பல்வேறு பணிகள் செய்தார். பார்கவியம்மாள் என்பவரை இவர் திருமணம் செய்து இல்லறம் நடத்தி வந்தார். ஒரு காலகட்டத்தில் இவருக்கு பெனடிக்ட் டிலனாய் என்னும் கத்தோலிக்க ராணுவ அதிகாரியிடம் தொடர்பு ஏற்பட்டது. அதன்மூலம் இயேசுவை அறிந்து கொண்டார். இன்னும் அதிகமாக இயேசுவை தெரிந்து கொள்ள அருள்தந்தை பீட்டர் ரோஸ் சே.ச என்பவரை சந்தித்து மேலும் விளக்கம் பெற்றார். அருள்தந்தை ஜான் பாப்டிஸ்ட் புத்தாரி என்பவரால் 1745, மே 14 அன்று தேவசகாயம் (லாசர்) என்று திருமுழுக்கு பெற்றார்.

கிறிஸ்தவர்களுக்கு எதிராக தூண்டப்பட்ட மன்னரால் 1749, பிப்ரவரி 23ல் கைது செய்யப்பட்டு மிகுந்த கொடுமைகளுக்குள்ளாகி, பல்வேறு இன்னல்களை கிறிஸ்துவுக்காக அனுபவித்தார். காற்றாடி மலையில் 1752 ஜனவரி 14ம் நாள் நள்ளிரவில் தேவசகாயத்தை சுட்டு கொன்றார்கள். இவரை 16ம் ஆசிர்வாதப்பர் அருளாளர் நிலைக்கு உயர்த்தி, 2012 டிசம்பர் 2ம் தேதி அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற திருப்பலியில் திருத்தந்தையின் பிரதிநிதி கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ, அதை அறிக்கையிட்டார். இப்படிப்பட்ட அருளாளரின் பாதையை பின்பற்றி நாமும் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. என்றும் வாழும் தந்தையே, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்தறிந்து நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லா கால கட்டங்களிலும் விளக்கி உரைப்பது நம் கடமை என உணர்ந்து செயல்பட வேண்டுமென்று அருளாளர் தேவசகாயம் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் நாயகனே இறைவா, நாட்டின் அமைதிக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஊறுவிளைவிக்க கூடிய பல அபாயகரமான செயல்கள், வன்முறைகள், செயலிழந்து போகவும் மக்கள் அனைவரும் அமைதியுடன் வாழவும் வேண்டி அருளாளர் தேவசகாயம் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர்களாகிவிட்டோம் என்று மனநிறைவு பெறாமல் பெற்ற திருமுழுக்கின் மூலமாக பெற்றுக்கொண்ட தூய ஆவியின் வழிநடத்துதலோடு நற்செய்திக்கு சான்று பகரும் மக்களாக வாழும் அருள்வாழ்வை தந்திட வேண்டுமென்று அருளாளர் தேவசகாயம் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**15-1-2017 பொங்கல் திருவிழா திருப்பலி**

**முன்னுரை** **D.V.R. ராஜா**

இன்றைய திருவழிபாட்டு வாசகங்களும் நற்செய்தியும் சிதறுண்ட மக்களை ஒன்று சேர்க்கவும், தூயோராக்கவும், எல்லா இடங்களிலும் கிறிஸ்துவை அறிவிக்கவும், இயேசு கிறிஸ்து தூய ஆவியால் திருமுழுக்கு கொடுத்து இறைவனோடு இணைக்க திருவுளம் கொண்டுள்ளார். மேலும் அவர் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் கடவுளல்ல. மாறாக அனைவருக்கும் கடவுளாய் இருக்கிறார். நாம் மொழியால், மதத்தால், இனத்தால், நிறத்தால், கலாச்சாரம், பண்பாட்டால் வேறுபடினும், நற்செயல்கள், தூய்மை, விசுவாசம் இவற்றால் ஒன்றுபடும்போது தந்தையாம் கடவுள் நிலைவாழ்வை வழங்குகிறார். நாம்

அதற்காகவே அழைக்கப்பட்டுள்ளோம். அதனால் நாம் நன்றியுள்ளம் கொண்டவர்களாய் வாழ்வது ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் இன்றியமையாதது, அவசியமானது.

நேற்று போகி என்னும் தீயில் பழைய பொருட்களை எரித்து நம் உள்ளத்தில் இருக்கும் வேண்டாத அழுக்குகள், சினம், துர்குணம் இவற்றைக் களைந்து, தை திங்கள் முதல் நாளை தமிழ் வருடத்தின் முதல் நாளாக பொங்கல் திருநாளாக கொண்டாடுகின்றோம். பண்பாட்டை நினைவு கூறவும் விளைச்சலுக்காகவும் வாழ்வின் ஆதாரங்களுக்காகவும் இறைவனுக்கு நன்றி நவிலும் நாளாகவும், உழவர்களின் உழைப்பையும் கால்நடைகளின் உதவியையும் நன்றியுள்ளத்தோடு நினைவு கூறுகின்ற பொங்கல் திருநாள். இன்று பொங்கல் பொங்கி மகிழ்ச்சியில் நிறைந்து நாமும் இந்த மகிழ்வின் விழாவில் பங்கேற்போம். இவையனைத்தையும் அளித்த இறைவனுக்கு நன்றி செலுத்தி திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. **திருச்சபைக்காக:** திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், இறைவனுக்காய் பணிசெய்யும் இறை ஊழியர்கள் அனைவரின் ஆன்ம சரீர நலன்களையும் பாதுகாத்து, திருச்சபையில் மாண்பும் பாரம்பரியமும் குன்றாமல் ஆழ்ந்த விசுவாசத்தில் மக்களை வளர்த்தெடுக்க தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. **அரசியல் தலைவர்களுக்காக:** மக்களின் உதவியால் இன்று பதவியில் இருக்கின்ற ஒவ்வொரு அரசியல்வாதியும், பணம், பதவி, சொத்து, ஆபரணங்கள் என்று தங்களையும் தங்கள் குடும்பங்களையும் மட்டுமே நினைத்து அரசியலில் ஈடுபடுவதை தவிர்த்து மக்களையும் மனசாட்சியின் குரலையும் சற்று கவனத்தில் கொண்டு அவர்கள் படும் அவதிகளை கண்டு நீதியோடு செயல்பட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. **மக்களுக்காக:** நமது பங்கு மக்களும் நம்மை சுற்றி வாழுகின்ற பிறமத சகோதரர்களும் தூய உள்ளத்தோடு தை திங்கள் முதல் நாளை பொங்கல் என்று மகிழ்ச்சி பொங்க மத வேறுபாடின்றி தமிழர் என்ற உணர்வோடு புதுப்பானையில் பொங்கலிட்டு மகிழ்ந்திடவும் இம்மகிழ்ச்சி ஒவ்வொரு இல்லங்களிலும் தங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. **இளைஞர் இளம் பெண்களுக்காக:** இருபால் இளைஞர்களும் முற்போக்கான காரியங்களில் தங்களையே ஈடுப்படுத்தி ஆக்கப் பூர்வமான பணிகளை செய்யவும் சமுதாயத்தின் சவால்களில் பின் வாங்காமல் துணிவோடும் ஆற்றலோடும் அணுகவும், "முதலில் விண்ணரசை தேடு மற்றவை கூட்டி கொடுக்கப்படும்" என்ற இறைவார்த்தையின் அடிப்படையில் தங்கள் செயல்கள் ஒவ்வொன்றையும் அமைத்துக்கொள்ள நல்ல எதிர்காலமும் வருவாயும் பெற்று குடும்பங்களை முன்னேற்றிடவும் அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**16.01.2017 முத்தி. ஜோசப் வாஸ் - இலங்கை** **திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

"எனது உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்பதைக் காட்டும்" என்று மார்த்தட்டி வாழ்ந்தவர்கள் புனிதர்கள். அதே வழியில் வாழ்ந்து காட்டிவர்தான் மறைபரப்பாளர் ஜோசப் வாஸ். இன்று இலங்கையில் "கத்தோலிக்க விசுவாசம்" ஓர் ஆலமரமாகக் காட்சியளிக்கிறதென்றால், அதற்கு புத்துயிர் ஊட்டிய பெருமை தந்தை ஜோசப் வாஸ் என்பவரையே சாரும்.

இவர் 1651, ஏப்ரல் 21ம் நாள் கோவாவில் சால்செட் தீவில் பெனாலிம் என்ற இடத்தில் கிறிஸ்டோபர் வாஸ், மரியா தே மிரண்டாவின் 8வது பிள்ளையாகப் பிறந்தார். சிறுவயதிலிருந்தே ஜெபவாழ்விலும் ஏழைகளின் மீது கரிசனை கொள்வதிலும் தனி ஆர்வம் காட்டியவர். கோவாவில் சேசு சபைக் கல்லூரியில் தனது படிப்பினை முடித்த இவர் தனது 25வது வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். கத்தோலிக்க திருச்சபையை அடியோடு அழிக்கத் திட்டம் தீட்டிய டச்சு பிரிவினை சபையினர் மத்தியில் 3 ஆண்டுகள் கடுமையாக உழைத்து கத்தோலிக்கர்களை ஊக்குவித்து, இப்பணியில் முழு வீச்சில் இறங்கி நல்ல பலன் கிடைத்ததை பார்த்த பிறகு மீண்டும் கோவா சென்றடைந்தார்.

பலமுறை மாறுவேடமிந்து பணியாற்றுவதற்காக கப்பலில் டச்சு ஆட்சிக்குட்பட்ட இலங்கைக்கு பயணம் செய்து அங்கே பல கத்தோலிக்க சிற்றாலயங்களை எழுப்பினார். இதனால் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒரு சமயம் கடுமையான வறட்சி தலைவிரித்தாடிய போது புத்தபிட்சுகள் எவ்வளவோ மந்திரங்கள் செய்தும் மழைவரவில்லையென்பதை அறிந்து, தந்தை ஜோசப் வாஸ் பொது இடத்தில் திருச்சிலுவை ஒன்றை நட்டு, பெருங்கூட்டத்தினர் முன் மண்டியிட்டு பக்தியோடு செபித்தார். கனத்த மழை பெய்தது. இதனால் மன்னனின் மதிப்பையும் பாதுகாப்பையும் பெற்றார். 1967ல் கண்டி நகரில் பிளேக் நோய்க்கும், அம்மைக்கும் ஏராளனமானோர் பலியானார்கள். தந்தை வாஸ் அங்கே அஞ்சா நெஞ்சத்துடன் நோயுற்றவர்களுக்கு தேவைப்பட்ட அனைத்து சேவையும் செய்தார். பின்னர் திரிகோணமலை, கொழும்பு போன்ற நகரங்களுக்கு சென்று மக்களை விசுவாசத்தில் திடப்படுத்தினார். டச்சு நகர வெறியர்கள் இவரை பிடிக்க இயலாத சூழ்நிலையில் ஏழைக் கத்தோலிக்கர் மீது குறி வைத்தனர். உடலை துண்டித்தனர். சிறையில் தள்ளினர். திருப்பலிக்கு வந்தவரை கொல்ல முயன்றனர். இத்தகைய நேரங்களில் தந்தை வாஸ் கிறிஸ்த்துவ மக்களுக்காக உயிரைக் கொடுத்து போராடினார். இதனால் தனக்கு கிடைக்க இருந்த ஆயர் பதவியையும் ஏற்றுக்கொள்ளவில்லை. தனது அயராத உழைப்பினால் 1710ல் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 55000 ஆக உயர்ந்திருந்தது.

இந்நிலையில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைக்கும் எடுத்து செல்ல இயலாத நிலையில் பாவமன்னிப்பு அருட்சாதனத்தைப் பெற்று, பாடுபட்ட சுரூபத்தை ஒருகையிலும் மற்றொரு கையில் எரியும் மெழுகு வத்தியும் பிடித்துக்கொண்டு அமைதியாக தனது ஆன்மாவை இறைவன் கையில் ஒப்படைத்தார். இவரைப் போன்று நாமும் திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைத்திடும் அர்ப்பண உள்ளம் பெற்றிட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நல்லாயனாம் இறைவா, உமது மேய்ப்பு பணியை நடத்திவரும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் தங்கள் பணியில் இறுதிவரை வாழ்ந்து உமக்கு சாட்சி பகர்ந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கமே உருவான இறைவா, உலக நாடுகளில் வாழும் கத்தோலிக்க திருச்சபையிலும் மற்ற திருச்சபையிலும் வாழும் கிறிஸ்தவர்கள் எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் உம்மை பிரிந்து செல்லாமல் உம்மையே பற்றிக்கொள்ளும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. எல்லாம் வல்ல இறைவா, இன்றைய காலகட்டத்தில் எங்கள் நாட்டையும், சமூகத்தையும் ஆசீர்வதித்து, நாட்டிற்கு தேவையான அனைத்து நன்மைகளையும் வழங்க வேண்டுமென்றும், மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொள்ளும் நல்ல தலைவர்களைத் தந்து சமுதாயத்தில் நீதி, நேர்மை, மனித நேயம், சமயஉரிமை, பொருளாதார முன்னேற்றம், விவசாயிகளின் முன்னேற்றம் போன்றவைகளை எங்களுக்கு ஆசீர்வாதமாகத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**20.01.2017 தூய செபஸ்தியார் திருவிழா** **திருப்பலி**

திரு. P. விக்டர்

**முன்னுரை**

அன்பார்ந்தவர்களே, ஒவ்வொரு ஆண்டும் சனவரி 20ஆம் நாள் தூய செபஸ்தியாரின் நினைவைப் போற்றும் வகையில் சிறப்பித்து வருகின்றோம். தூய செபஸ்தியார் கி.பி. 256ஆம் ஆண்டு உரோமை நகரில் பிறந்தார். நாட்டுக்காக சேவை செய்ய விரும்பி உரோமை நாட்டின் இராணுவத்தில் இணைந்து பணிபுரிய ஆரம்பித்தார். இந்நிலையில் இயேசுவின் போதனை அறிந்து திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவராக மாறி, தான் கிறிஸ்தவராக மாறியது மட்டுமன்றி தன்னோடு பணிபுரியும் சகதோழர்களையும் கிறிஸ்தவர்களாக மாற்றினார். தூய செபஸ்தியாரின் செயல்களால் கோபமுற்ற பேரரசன் மரத்தில் கட்டிவைத்து அம்புகள் எய்து அவரைக் கொலை செய்யும்படி ஆணையிட்டான். அரசனின் ஆணைப்படி தூய செபஸ்தியாரை ஓர் மரத்தில் கட்டிவைத்து அம்புகள் எய்கின்றனர். அவர் இறந்து விடுவார் என்று எண்ணி அவரை அப்படியே விட்டு விட்டு சென்றனர். ஆனால் அந்த வழியாக வந்த ஐரீன் என்ற சகோதரி தூய செபஸ்தியாரின் உடலில் உயிர் இருப்பதை கண்டு அவரைத் தனது இல்லத்தில் வைத்து காப்பாற்றுகிறார்.

முழுமையாக நலமடைந்த தூய செபஸ்தியார் மறுபடியும் அரசனை சந்தித்து கிறிஸ்தவர்களுக்கு எதிராக செய்து வரும் கொடுமைகளை கண்டிக்கிறார். மன்னன் அவரது கண்டித்தலைக் கண்டு கடுங்கோபமுற்று கொடுந்தடிகளால் மறிக்கும் வரை அவரை அடித்து கொலை செய்கின்றான். தூய செபஸ்தியார் கி.பி. 288ஆம் ஆண்டு மறைசாட்சியாக உயிர் நீத்தார். இந்நன்னாளில் தூய செபஸ்தியாரின் வீரத்தை நாமும் பெற்று திருச்சபையின் வளர்ச்சிக்காக பணிபுரியும் வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எங்களை அதிகமாக அன்பு செய்யும் ஆண்டவரே, இன்று நாங்கள் விழா கொண்டாடும் தூய செபஸ்தியாரின் கிறிஸ்தவ வாழ்வும் அவரது வீரம் செரிந்த மறைசாட்சியாக உயிர் நீத்த தியாகமும் எங்கள் வாழ்வில் அர்ப்பண வாழ்வையும் ஆண்டவர் இயேசுவுக்காக நற்பணிகள் பல செய்ய வேண்டும் என்கிற உணர்வையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. எங்களுக்காக யாவையும் செய்து முடிக்கும் ஆண்டவரே, பணமிருந்தும், பொருள் இருந்தும், அதிகாரம் இருந்தும், புகழ் இருந்தும், அவற்றையெல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாமல் ஆத்தும தாகத்தோடு மறைப்பரப்பு பணிசெய்து இரத்த சாட்சியாக மரித்த தூய செபஸ்தியாரைப்போல நாங்களும் நற்செய்தி அறிவிப்பு பணியை துணிவுடன் செய்ய வரம் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

3. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, தூய செபஸ்தியாரின் திருவிழாவை கொண்டாடும் நாங்கள் உண்மைக்கு சாட்சியாக, தீமைகளை எதிர்த்து நிற்க திறன் கொண்டவர்களாக, துன்பங்களை ஏற்கும் துணிவு கொண்டவர்களாக, பரிசுத்த ஆவியாரின் துணையோடு உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

**21.01.2017 தூய ஆஞ்ஞேஸ் (தூய ஆக்னேஸ்) திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

உரோமை நகரில் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர் தூய ஆக்னேஸ். இவர் இயற்கையான அழகு கொண்டவராய் திகழ்ந்தார். இதனால் இவரை மணமுடிக்க உரோமையின் செல்வச் செழிப்புள்ள இளைஞர்கள் பலர் விரும்பினர். ஆனால் ஆக்னேஸ், இயேசுவையே மணவாளராகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தார். உரோமை நகர் தலைவனின் மகன், இவர்மீது ஆசை கொண்டு இவரை மணந்து கொள்ள முடிவு செய்து, "நீ கிறிஸ்தவ வேதத்தை விட்டுவிட்டு என்னை மணந்துகொள்" என்று கேட்டான். ஆக்னேஸ் "வான தூதர்கள் பணிபுரியும் இயேசுவின் மனைவி நான்" என ஆணித்தரமாக உறுதிப்படக் கூறினார். இதைக்கேட்டு, ஆத்திரமடைந்த தலைவனின் மகன், "அவள் தலையை வெட்டிக் கொல்லுங்கள்" என சேவகனுக்கு கட்டளையிட்டான். அவனும் அவ்வாறே வெட்டிக் கொன்றான். ஆக்னேஸ், "ஆண்டவரே இதோ நான் உம்மிடம் வருகிறேன் உம்மையே நான் அன்பு செய்தேன், உம்மையே நான் தேடினேன்" என்று கூறிக்கொண்டே இறைபுகழ் கூறி உயிர் நீத்தார்.

மத்திய பிரதேசத்தில், இந்தூர் நகரிலுள்ள பகவன்புரா கிராமத்தில் அடிப்படைவாத இந்துக் குழுவினர் கிறிஸ்துவப் பெண்களை நிர்வாணமாக்கி வீதி முழுவதும் ஊர்வலமாகக் கொண்டு சென்றனர். அதில் ஓர் ஆணும், நான்கு பெண்களும் 34 வயதுள்ள அருட்சகோதரி பெய்சாவும் அடங்குவர். இந்த வினாடி வரை பல இடங்களிலும் கிறிஸ்துவுக்காக சாட்சிய வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் விசுவாசிகளைப் போல நாமும் வாழ்வோம் என உறுதியளித்து, தடுமாற்றமில்லாத விசுவாசத்துடனும் பக்தியுடனும் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அனைத்துலகின் வேந்தரே இறைவா, கத்தோலிக்கத் திருச்சபையை அற்புதமாக வழிநடத்திக் கொண்டிருக்கும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் உமக்கேற்ற மக்களாக வாழவும், உம்பணியினை சிறப்பான முறையில் செய்திட வேண்டுமென்றும் அவர்களுக்குத் தேவையான அனைத்து ஆற்றல்களையும், வரங்களையும் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அனைத்துலகின் ஆண்டவரே எம் இறைவா, உம்மைப்போல் வாழ்வில் எளிமையும், அன்பும், பகிரும் மனப்பான்மையும் கொண்டவர்களாகவும், உமது நற்செய்திப்பணியினை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லக் கூடிய தன்னம்பிக்கையையும், அருளையும் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆற்றல்மிக்க இறைவா, எங்களைச் சோதனையிலும், தீய நெறியிலும் வீழ்த்திட வரும் பலவித சூழல்களிலிருந்து விடுவித்து, உமது தூய ஆவியின்மீது கொண்ட நம்பிக்கையினால் உமக்கேற்ற நெறியில் நாங்கள் நடந்திட வேண்டுமென்றும், இத்தீய நெறிகளை விரட்டியொழிக்கும் சக்தியை தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

**22.01.2017 ஆண்டின் பொதுக்காலம் 3ம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

நான் ஏதென்சுக்கு உரியவனோ
கிரீசுக்கு உரியவனோ அல்ல - நான்
உலகிற்கு உரியவன்-சாக்ரடீசு

தந்தையாம் இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் மாற்றத்தைக் கொடுத்து நல்ல கொடைகளையும், திறமைகளையும் தூய ஆவி மூலமாக வாரி வழங்கியிருக்கிறார். நாம் இவ்வுலகில் இனிதே வாழ நீடிய ஆயுளையும் நமக்குத் தந்துள்ளார். உண்மை மனமாற்றம் ஏற்பட்டிருந்தால்தான் நாம் பெற்றதை பிறரிடம் வழங்க இயலும். தவறுகளுக்காக சற்று வருந்துவதும் பின் சிறிது நாள் சென்றதும் மீண்டும் அவற்றிற்கு திரும்புவதும் மனமாற்றம் அல்ல. அழைத்த அழைப்பில் நிலைத்து நின்ற பேதுரு, அந்திரேயா போன்று காரிருள் ஆனாலும் என் கையில் பாலன் இயேசு எனும் பேரொளி உள்ளது. அந்த ஒளியில் நானும் இறைவனை நோக்கி நடந்து பிறரையும் நடக்கச் செய்வேன் என உறுதி கொண்டு நடப்போம். உலகிற்கும் இந்த ஒளியை ஏற்றுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பே இறைவா, இவ்வுலகிற்கு ஒளியாக வாழ எம் திருஅவை பணியாளர்களை அழைத்துள்ளீர். அவர்கள் அனைவரும் உம் பாதையில் நடந்து மக்களை மனம் மாறச்செய்து உம் இதயத்திற்கு உகந்தவர்களாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் உறைவிடமே இறைவா, உமது பிறப்பின் வெளிச்சத்தை உலகிற்கு ஒரு விண்மீன் வழிகாட்டியதுபோல, நாங்களும் பிறரின் வாழ்வில் இருளில் தவித்துக்கொண்டிருப்பவர்களுக்கு ஒளியாகவும், துணையாகவும் இருந்து அவர்கள் உம் வழியில் நடக்க தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயும் தந்தையுமான இறைவா, இப்புதிய ஆண்டில் உலகமும், அதிலுள்ள மக்களும், பிரிவினையின்றி நலமோடும், வளமோடும், இறையன்பும், பிறரன்பும் கொண்டு வாழ வேண்டும். ஒற்றுமையும், சமாதானமும் வருடம் முழுமையும் பெற வேண்டும். இவ்வரங்களைத் தந்து ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**25.01.2017 தூய பவுல் மனமாற்றம் திருப்பலி**

திரு. சாண்டோ

**முன்னுரை**

இறையேசுவில் இனிய நண்பர்களே, இன்று நாம் தூய பவுல் மனமாற்றம் அடைந்த நாளை திருவிழாவாக கொண்டாடுகின்றோம். இறைவன் மனிதர்களை தன் பணிக்காக அழைப்பது வித்தியாசமான ஒன்று. பல நேரங்களில் தகுதியற்றவரை அழைத்து அவரை தகுதியுடையவராக்குகிறார். அவ்வாறுதான் இயேசு தன்னை பின்பற்றுபவர்களை கொடுமைப்படுத்திய சவுலை அழைத்து தனக்கு ஏற்புடைய பவுலாக மாற்றினார். இவ்வாறு தனக்காக அழைக்கப்பட்ட பவுல் உயிரையே கொடுக்கும் அளவிற்கு தன்னையே கிறிஸ்துவுக்காக ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவைப் பின்தொடர்ந்து அவரது பணியை செய்யும் எல்லாருக்கும் அரும்பெரும் அடையாளங்களை செய்ய வல்லமையை கிறிஸ்து தருகிறார். இந்த ஆற்றல் அழைக்கப்பட்டவருடைய தனிப்பட்ட தேவைகளுக்காகவோ, பெயருக்காகவோ அல்ல மாறாக நற்செய்தியை அறிவிக்கும் மாபெரும் பணிக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது. அழைக்கப்பட்ட

ஒவ்வொருவரும் மறு கிறிஸ்துவாக வாழவே இந்த அழைப்பு. இதை உணர்ந்து வாழும் வரத்தை இறைவனிடம் மன்றாடி இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உலகாளும் இறைவா, உம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்களின் அழைத்தலை உணர்ந்து பொதுப்பணிபுரியும் நல்மனதினை தந்திட உம்மை மன்றாடுகின்றோம்.
2. வழிநடத்தும் இறைவா, நற்செய்திப் பணிபுரிய தங்களையும் தங்கள் குடும்பத்தையும் உமது பாதத்தில் ஒப்புக்கொடுத்து செயலாற்றிவரும் பொதுநிலையினரில் உள்ள உமது பணியாளர்களை ஆசிர்வதித்து அவர்கள் உலக பொருட்களிலும் நிறைவடைய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.
3. குணமளிக்கும் இறைவா, எம்மத்தியில் வாழும் தீராத நோயினால் துன்பப்படும் ஏழை எளிய மக்களை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். உமது நம்பிக்கையின் ஒளியை அவர்கள் மேல் ஒளிரச்செய்து மனதிடத்தையும் தைரியத்தையும் தந்து வழிநடத்த உம்மை மன்றாடுகின்றோம்.
4. திருப்பொழிவு செய்யும் இறைவா, எம் குடும்பங்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம், இறையழைப்பை உணர்ந்த தூய பவுல் உமது பணியை இறுதிவரை முழுமனதோடு செய்தது போல் எம் குடும்பங்களிலும் இறை அழைப்பை ஏற்று எம் பிள்ளைகள் உமது பணிக்காக தங்களையே அர்ப்பணிக்கும் மனத்தெளிவை தந்தருள உம்மை மன்றாடுகின்றோம்.

## 26.01.2017 தூய திமொத்தேயு மற்றும் தூய தீத்து திருப்பலி

**"புனிதர்களின் சமூக உறவை விசுவசிக்கிறேன்"**

**திருமதி. டிலைலா சேவியர்**

**முன்னுரை**

விசுவாசம் உம் உள்ளத்திலும் இருக்கிறதென்று உறுதியாக நம்புகிறேன் (2திமொ1:6-8) என்பதை கூறிய தூய பவுல் முதல்முறை லிஸ்திரா சென்றபோது திமோத்தேயு கிறிஸ்தவரானார். ஏழு ஆண்டுகளுக்குப் பின் புனித பவுல் இரண்டாம் முறை லிஸ்தரா சென்றபோது, அங்குள்ள கிறிஸ்தவர்கள் திமோத்தேயுவை மிகவும் பாராட்டி பேசினார்கள். எனவே புனித பவுல் அவரை தமக்கு உதவி செய்ய தேர்ந்து கொண்டார். மேலும் புனித பவுல் திமோத்தேயுவை திருச்சபைக்காக வேதனைகளை அனுபவிக்கும் கிறிஸ்தவர்களிடம் அனுப்புவார். புனித பவுலின் வழியிலேயே இவர் நடந்துக் கொண்டால் எபேசு நகருக்கு ஆயராக நியமனம் பெற்றார். புனித பவுல் சிறையில் வைக்கப்பட்டபோது திமோத்தேயுவுக்கு மெய்மறையைப்பற்றி இரு திருமடல்கள் எழுதி அனுப்பினார். திமோத்தேயு எண்ணற்ற புண்ணியங்களையும், தவச்செயல்களையும் செய்து, வேதத்திற்காக அடிக்கப்பட்டு மறைசாட்சியாக முடிவையேற்றார்.

**புனித தீத்து** இவரும் புனித பவுலின் சீடர். அவரால் மனமாற்றம் பெற்றவர். புனித பவுல் இவரை எபேசு நகரிலிருந்து கொரிந்து நகர் திருச்சபைக்கு அனுப்பி, அங்கேயிருந்த கிறிஸ்தவர்களிடையே தோன்றிய சிக்கலை நீக்கி வைக்கவும், எருசலேம் நகரிலுள்ள ஏழை கிறிஸ்தவ மக்களுக்குப் பொருள் உதவி பெற்று வரவும் செய்தார். கி.பி 64ல் இவரை கிரிட் தீவுக்கு மறைப்பரப்பு பணியின் பொருட்டு அனுப்பி வைத்தார். கி.பி 65ல் தால்மீசியா நாட்டுக்கு மறைப்பரப்பு பணியின் பொருட்டு இவர் அனுப்பப்பட்டார். மீண்டும் கிரிட் தீவுக்கு திரும்பி வந்து தமது 94வது வயதில் விண்ணக வாழ்வை அடைந்தார். "கடவுள் மேல் விசுவாசமுள்ளவர்கள் நற்செயல்களில் ஈடுபட கருத்தாயிருக்கும்படி நீர் வற்புறுத்த வேண்டும் என்பது என் விருப்பம்" (தீத்து 3:4-8) திருமறையைப்பரப்புவதில் விடாமுயற்சியும், ஆர்வத்தையும் பெற்றிட இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, உமது அருட்பணியை தொடர்ந்து நடத்திட உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தாங்கள் செய்கின்ற அருட்பணியில் ஏற்படுகின்ற தோல்விகள், பிரச்சனைகள், நெருக்கடிகள், துன்பங்கள் போன்ற தடைகள் ஏற்படும் போது இன்றைய திருவிழாவினை சிறப்பிக்கும் புனித திமோத்தேயு புனித

தீத்துவைப் போல மனவலிமையும், இறை உந்துதலும் பெற்று திருச்சபையை பாதுகாக்கும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அனைவரையும் அரவணைத்து பாதுகாக்கும் இறைவா, உமது பணியை தொடர்ந்து திருச்சபையை வழிநடத்தி வரும் அனைத்து அருட்பணியாளர்களுக்கும் நல்ல உடல் நலம் தந்தருளும்.இவர்களுக்கு ஏற்படும் அவமரியாதை, கொடுமைகள் எதிர்பாராத பிரச்சினைகளிலிருந்து உமது வல்லமையான கரம் இவர்களை பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நன்மைகள் புரியும் அன்பு இறைவா, கத்தோலிக்க திருச்சபையிலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதித்தருளும். குடும்பங்களிலுள்ள வாலிப பிள்ளைகளை ஆசீர்வதித்து, இவர்களின் உள்ளங்களில் தேவ அழைத்தலின் மேன்மையையும், அவசியத்தையும் உணர செய்து, தங்களை இறைப்பணிக்காக அர்ப்பணிக்கும் தியாக உள்ளத்தை தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**28.01.2017 தூய தாமஸ் அக்குவினாஸ் திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்றைய தினம் தூய தாமஸ் அக்குவினாஸ் என்னும் தூயவரின் விழாவாக சிறப்பிக்கப்படுகிறது. உலகப்போக்கை விரும்பாத இவர் 1243ல் புனித சாமிநாதரின் சபையில் சேர விரும்பினார். இவரது குடும்பத்தினர் இவரை சபையில் சேரவிடாமல் இரண்டு ஆண்டுகள் இவரை அடைத்து வைத்து இவரது மனதை மாற்ற பல முயற்சிகள் செய்தார்கள். எதற்கும் பணியாமல் குருமடத்தில் சேர்ந்து பணிபுரிந்தார். யாரிடமும் பேசாத இவரை தூய ஆல்பர்ட் தனது சீடனாக்கி "ஊமை மாடு இவர் பேசுவதை உலகமே கேட்கும்" என்று கூறினார். மேலும் இவரை உலகத்தார் புகழும் அளவிற்கு உருவாக்கினார். பலநூல்கள் எழுதிய இவர் நேபில்ஸ் நகரில் இருந்த போது சிலுவையை நோக்கி ஜெபித்து கொண்டிருக்கும் போது சிலுவையில் தொங்கிய இயேசு வாய் திறந்து "தாமஸ் என்னைப் பற்றி மிக நான்றாக எழுதிக் கொண்டிருக்கிறாய் உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்க அதற்கு இவர் "என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உம்மைத்தவிர வேறு எதுவும் வேண்டாம்" என்று கூறினார்.

சாந்த குணமானது கற்பையும் ஏனைய புண்ணியங்களையும் விட உயர்ந்தது. ஏனெனில் மிக சிறந்த புண்ணியமான அன்பை இது நிறைவுபெற செய்கிறது என்று கூறியுள்ளார் தூய தாமஸ் அக்குவினாஸ். இவரைப் போல் சாந்தம் என்ற பண்பைப் பெற்று வாழ இத்திருப்பலியில் இணைந்து ஜெபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அமைதியின் நாயகனே இறைவா, உமது வழித்தோன்றல்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரும் நீர் பகிர்ந்தருளிய அமைதி என்னும் ஆயுதம் கொண்டு அன்பு வழியில் மனந்திருந்த வேண்டிய அருள் ஞானத்தை அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பின் இறைவா, இந்திய திருநாட்டில் நிலவிவரும் இப்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையில் மக்களின் இயலாமையை நீக்கி, தேவையான உரிமைகளை பெற்று நிறைவாக வாழ நாட்டின் பொறுப்பாளர்கள் திட்டமிட வேண்டிய அருள் ஞானத்தை அளிக்குமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

3. நலமளிக்கும் இறைவா, வளரும் சமுதாயத்தினர் இக்கால சூழ்நிலையில் சிறப்பாக தடம் புரண்டு தம் வாழ்நாளை வீணடிக்கும் நிலைவராமல் அவரவர் உள்ளத்தில் உம் தெய்வீக ஒளிவீச்சால் பக்குவப்படுத்தி அறிவுடன் செயல்பட்டு வாழ்நாளை பாதுகாக்கும் நிலைபெற உம்மை மன்றாடுகிறோம்.

**29.01.2017 ஆண்டின் பொதுக்காலம் 4ம் ஞாயிறு திருப்பலி**

**திருமதி. ராணி வில்சன்**

**முன்னுரை**

"தூய நோக்குடன் எதைச் செய்தாலும் சூரிய ஒளியைத் தொடரும் நிழல்போல மகிழ்ச்சி தொடரும்"

இறைவன் ஒவ்வொரு நாளும் அறிகுறிகள் பல கொடுத்துக் கொண்டே இருக்கிறார். மக்களின் வாழ்க்கைச் சூழல்கள், செயல்பாடுகள் இவற்றின் மூலமாக இறைவன் நமக்கு கொடுக்க வேண்டிய செய்திகளை கொடுக்கிறார், நமது சிந்தனைகளைத் தூண்டுகிறார். இவைகளின் மூலம் இறைவனது உடனிருப்பை, பராமரிப்பை நாம் செய்ய வேண்டியவைகள் அனைத்தையும் உணர்த்திக் கொண்டிருக்கிறார். நான் நானாக இருந்து இறைவனின் மேன்மையில் இணைத்துக் கொள்கிறபோது, ஏற்றுக்கொள்கின்றபோது என்னையே கண்டுக் கொள்கிறேன். நாம் அவரை கெட்டியாக பிடித்துக்கொண்டு தூய நோக்குடனும் நல் மனதுடனும் மகிழ்வாய் வாழ வழிதேடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. ஏழ்மைக் கோலம் ஏற்ற இறைவா, எங்கள் திரு அவையின் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவு சகோதர சகோதரிகள் அனைவரும் எளிய, ஏழ்மை கோலம் ஏற்று வாழ அழைக்கப்பட்டுள்ளனர். அப்படியே வாழ நீர் அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.
2. துயருறுவோருக்கு ஆறுதலே, ஏழைகள், அனாதைகள், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், கைவிடப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும் நீர் ஆறுதலாய் இருந்து தேற்றவும், நாங்களும் உம்மோடும் இணைந்து ஆறுதல் தருபவராய் வாழவும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. தூய்மையே இறைவா, மனிதகுலம் முழுவதும் கனிவுடையவர்களாய், நீதியை நிலைநாட்டுபவர்களாய், தூய்மையானவர்களாய் வாழ பிறரையும் வாழ வைக்க வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கத்தின் முகமே இறைவா, ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் எங்கள் தமிழ் நாட்டிற்கும் இரக்கமுடைய நீதியின் பொருட்டு துன்பம் ஏற்று, மக்களுக்கு அமைதியான நல் அரசை கொடுக்கும் தலைவர்களை தன்மானமுள்ள, மக்களுக்காக உயிரையே கொடுக்கக்கூடிய நல்ல தலைவர்களை எங்களுக்கு கொடுத்து நல்வழி நடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**31-01-2016 தூய ஜான் போஸ்கோ நினைவு விழா** **திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது இளைஞர்களின் ஆசிரியரும், நண்பரும் இறைநம்பிக்கையின் நாயகருமான தூய ஜான் போஸ்கோவின் நினைவு விழாவினை கொண்டாடுகிறது. தூய ஜான் போஸ்கோவின் வாழ்வு செபத்தின் சிறப்பை உணர்த்தும் உன்னத வாழ்வு. இறைவன் இவரது செபத்திற்கு இறங்கி எத்தனையோ அளப்பரியச் செயல்களை ஆற்றியுள்ளார். தொன் போஸ்கோ என்று அன்போடு அழைக்கப்படும் இவர், செபத்தின் இன்பத்தை, மகிமையை தன் வாழ்வில் பிரதிபலித்தவர். செபத்தின் வல்லமையால் புதுமைகள் பல செய்தவர். செபத்தின் ஆற்றலால் வல்லவராகத் திகழ்ந்தவர். "தந்தை ஜான் போஸ்கோவினுடைய வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதும் செபமாகவே கழிந்தது" என்றால் அது மிகையாகாது. அவரது செபமும், தபமும், திருப்பலியும், புண்ணியங்களும் வாழ்வின் ஒவ்வொரு அசைவும் நம்பிக்கையையும், மனிதாபிமானத்தையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தும் அடையாளமாகவே அமைந்தது. அவரின் விழாவை நினைவுகூறும் நாமும், நமது செபவாழ்வு எத்தகையதாக இருக்கிறது என்பதை சீர்தூக்கி பார்க்க அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை மனதில் வைத்து தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. கடவுள் மீது வைக்கும் நம்பிக்கையின் ஆழத்தை எமக்குக் காட்டியவரே, உம்மை எமது வாழ்வில் பின்பற்றுவதன் மூலம் நிச்சயம் அதே நம்பிக்கையின் ஆழத்திற்கு செல்லமுடியும், வாழ்வை உம் மனநிலையோடு அணுக முடியும் என்பதை உணர்ந்தவர்களாக வாழ தேவையான வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இறைவனை நம்பி செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப்போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து எம் விசுவாசத்தை ஆழப்படுத்தும் ஆற்றலை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் இறைவா, எங்கள் வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம் போன்ற வேளைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மை என்றும் பற்றிக்கொண்டு வாழும் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

### 1. புத்தாண்டில் புது வாழ்வு நோக்கி

திரு. லூயிஸ் சகாயராஜ்

அன்பிற்கினியோரே, அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் - அமைதி அருளும் ஆண்டவரின் அருளாசீர் ஒவ்வொருவரிலும் தங்கி பலன் தர நம்பிக்கையுடன் செபிப்போம்.

நம் வாழ்க்கையில் மேலும் ஓராண்டு கடந்து புதிய நாட்காட்டி ஆண்டைத் துவங்குகின்றோம். 366 நாட்களைக் கடந்து வந்த நாம் மீண்டும் ஒரு புதிய எண்ணிக்கையை நம்பிக்கையோடு எதிர்கொண்டு ஆரம்பிக்கின்ற இவ்வேளையில் புது வாழ்வு நோக்கி பயணிக்க அழைக்கின்றோம்.

புது வாழ்வு - அது என்ன புதுவாழ்வு?...

அப்படியானால், இதுவரை வாழ்ந்தது?...

1. புதிய வாக்குறுதிகளை எடுப்பது மட்டுமின்றி ஏற்கனவே எடுத்த வாக்குறுதிகளைப் புதுப்பித்து தொடர்வது புதுவாழ்வு.
2. இறைவனை நமக்குத் துணையாக இருக்கச் சொல்லி வேண்டுவதை நிறுத்தி, நாம் இறைவனோடு உடனிருக்கும்படி மாற்றிக் கொள்ள முனைவது புதுவாழ்வு.
3. மருந்தை உணவாக உட்கொள்ளும் தேவையற்ற வழக்கத்திலிருந்து விடுபட்டு, உணவே மருந்து என்ற உயர்ந்த எண்ணத்தை வாழ்வாக்குவதே புதுவாழ்வு.
4. பணம் மட்டுமே வாழ்க்கை என்று பாடுபடுவதைக் குறைத்து, பணம் வாழ்க்கையின் பல அவசியங்களில் ஒன்று மட்டுமே என்ற உண்மையை உணர்வதே புதுவாழ்வு.
5. துயரங்களைப் பற்றிப் பேசி துக்கப்படுவதைத் தவிர்த்து, நமது புதுவாழ்வின் உயரங்களைப் பற்றிப்பேசி இன்பமடைவதே புதுவாழ்வு.
6. செயற்கைத் தனமான உணவுகள், உடைகள் வாழ்வு முறைகளை மாற்றி, இயற்கையோடு பிணைந்து வாழும் புதுவாழ்வு.
7. விரல் நுனியில் உலகைக் காணும் தொழில்நுட்பத்தின் தொல்லைகளைத் தூரவிரட்டி, விரசமில்லாத, விரிசலில்லாத, விசுவாசம் குறையாது வாழும் புதுவாழ்வு.
8. குடும்பங்களில் குறைகளைக் கண்டு குமுறாமல், அக்குறைகளை நம் அக்கறையினால் அகற்றிடும் புதுவாழ்வு.
9. இழந்து போனவற்றை எண்ணி இடிந்து போகாமல், இழந்தும் இருக்கின்றோமே என்னும் வீரியத்துடன் களமிறங்கும் புதுவாழ்வு.
10. சுற்றுச் சூழலை பற்றி கவலைப்படாமல் மாசுபடுத்தும் மனநிலையை மாற்றி, நலமான, சுத்தமான, சுகாதாரமான சூழலை உருவாக்கும் உன்னதமான புதுவாழ்வு.
11. நேரத்தையும், உணவையும், பணத்தையும் வீணடித்து பாழாக்காமல், அளவோடு பயன்படுத்தி வளமோடு வாழும் புதுவாழ்வு.
12. நிரந்தரமில்லா உலக வாழ்வில் நிம்மதியாய் வாழும் வழியைக் கண்டுபிடித்து அர்த்தமுள்ளதாக்கிடும் புதுவாழ்வு.

ஆம், கடந்த காலங்களில் நாம் நம்மையே உருக்குலைய செய்திருப்போம், அல்லது பிறரால் உருக்குலைந்து உருப்படாமல் கிடந்திருப்போம், நம்மை இப்புதிய ஆண்டில் இயேசுவிடமும் அன்னை மரியாளிடமும் அர்ப்பணிப்போம். நம்மைப் சூழ்ந்துள்ள தேவையற்றவைகளைக் களைந்து, நம்மில் மனிதத்தை மலரச்செய்து, நம்முள் தெய்வீகத்தை மிளரச்செய்ய அவர்கள் நம்மைப் புதுப்பிப்பார்கள் நாம் புதுப்பிக்கப்பட்டு புத்தாண்டில் புதுவாழ்வு நோக்கி பயணிப்போம்.

அன்பில் அடித்தளமிட்டு அமைதியில் நிலைநாட்டப்பட்டு

மகிழ்ச்சியில் முழுமை பெற்று நம்பிக்கையில் உறுதியடைந்து

புத்தாண்டில் புதுவாழ்வை புத்துணர்வுடன் தொடங்கிடுவோம்.

வாழும் வரை வாழ்க்கை, வாழ்த்திக் கொண்டே வாழ்வோம்.

## 2. தூய தொன் போஸ்கோவின் வாழ்வில் மரியன்னை

திரு. ஜான் அலெக்சாண்டர்

தூய தொன் போஸ்கோ செய்த ஒவ்வொரு செயலையும் "அருள்நிறைந்த மரியே" என்ற செபத்தைச் சொல்லிவிட்டுதான் செய்வார். அவர் மரியாளின் மீது கொண்ட பக்தி அளவிடமுடியாதது. அன்னை மரியாளின் பரிந்துரை வழியாக அவர் வாழ்வில் நிகழ்ந்த புதுமைகள் எண்ணிலடங்கா. தன் ஒன்பது வயது கனவு முதல் பல உதாரணங்களை சொல்லிக் கொண்டே போகலாம். குறிப்பாக அந்த ஒன்பது வயது கனவில் மரியன்னையின் துணை வழியாக எதிர்காலத்தில் அவர் ஆற்றவிருக்கும் இளையோர் பணியைக் குறித்து காட்டுவதை நாம் உணரலாம்.

தூய தொன் போஸ்கோ மரியன்னையின் பக்தியில் வளர்வதற்கு முழு காரணமாக விளங்கியவர் அவரது தாய் மம்மா மார்கரெட். சிறுவனாக இருந்த ஜானை கஸ்தல்நுவோவில் விடுவதற்கு முன் "ஒரு போதும் தேவத்தாயின் பக்தியை மறக்காதே" என்று மம்மா மார்கரெட் கூறினார். இதை தொன் போஸ்கோ தன் ஆழ்மனதில் பதித்தவராய் மட்டுமல்ல பின்னாலில் வளர்ந்து குருமடத்தில் சேர வேண்டிய நாளிலும் தன் தாய் அவரிடம் சொன்னது "நீ இவ்வுலகில் பிறந்ததும் உன்னை நான் தேவ அன்னைக்கு ஒப்புக்கொடுத்தேன். பின்னர் உன்னையும் அன்னையின் மீது பக்தியாய் இருக்கும்படிச் சொன்னேன். இப்போது நீ உன்னை முழுவதும் அந்த தாய்க்கு ஒப்புக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். நீ குருப்பட்டம் பெற்றால் உன் உயிருள்ளவரை அத்தாயின் பெருமையை எங்கும் பரப்பிட மறவாதே" என்பதே.

சலேசிய சபையைக் கட்டி எழுப்ப உறுதுணையாகவும், சபையின் வளர்ச்சியில் அச்சாணியாகவும் இருந்ததும் அன்னை மரியாள் மற்றும் அருள்நிறைந்த மரியே என்ற சிறு செபம் மட்டுமே என்று தொன் போஸ்கோ பலமுறை சொல்லியிருக்கிறார். மரியன்னையின் மீதுள்ள பாசத்தினாலும் அன்பினாலும் தொன் போஸ்கோ, கிறிஸ்தவர்களின் சகாய அன்னையாகவும் சலேசிய சபையை சகாயத்தாய்தான் வழிநடத்துகிறார் என்று அடிக்கடி நினைவுறுத்துவார். சபையின் தொடக்கத்தில் பல தோல்விகள் இருந்தாலும் சகாய அன்னையின் ஆசீர் என்றும் இருந்ததை அவர் உணர்ந்தார். தொன் போஸ்கோவின் வாழ்வில் அந்த சகாய அன்னையின் வழிகாட்டுதலில் பல இளைஞர்களை மரியன்னையின் பாதத்தில் சேர்த்தது. இளையோர் மன்றங்களில் மாணவர்கள் மரியன்னை பாடல்கள் பாடும்போதெல்லாம் தானும் அவர்களோடு மகிழ்ந்து பாடுவார். மரியன்னையின் பக்தியில் தன்னை ஒருமித்து அதன்வழி பல மாணவர்களைக் கவர்ந்தவர் நம் தொன் போஸ்கோ.

மரியன்னை தொன் போஸ்கோவின் வாழ்வில் செய்த மிகப்பெரிய புதுமை என்று சொன்னால் அது மரியன்னைக்காக கிறிஸ்துவர்களின் சகாய அன்னையின் பெயரில் கட்டியெழுப்பிய மாபெரும் பேராலயத்தை நாம் சொல்லலாம். பல எதிர்ப்புகள் வந்தது, அரசாங்க அனுமதி மறுக்கப்பட்டது என்றாலும் அப்போதைய திருத்தந்தை 9ம் பத்திநாதரின் அங்கீகாரம் மற்றும் அவரின் முதல் நன்கொடையான ரூ.500 மட்டுமே மூலதனமாக கொண்டு கையில் வேறு பணமில்லாமல் அப்பேராலயம் கட்டும் பணியை ஆரம்பித்த தொன் போஸ்கோவிற்கு பணம் தேவைப்பட்ட போதெல்லாம் சகாய அன்னை மூலமாக வியப்பிற்குரிய வகையில் கிடைக்க ஆரம்பித்தது. அவர் முழுநம்பிக்கையோடு "சகாய அன்னை தாமே தமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டிக்கொண்டாள்" என்று கூறுவார்.

அது மட்டுமல்ல, மோட்ச இராக்கினி மாதா திருவிழாவிற்கு ஆயத்தமாக மூன்று நாள் மறையுரை ஆற்ற தொன் போஸ்கோ அழைக்கப்பட்டிருந்தார். அவ்வூரில் மூன்று மாதகாலமாக மழையின்றி பயிர்கள் அனைத்தும் வாடிப்போயின. எத்தனையோ பக்தி முயற்சிகள், செப வழிபாடுகள் நடத்தப்பட்டும் பயனில்லை. முதல் மறையுரையில் தொன் போஸ்கோ மக்களிடம், "இந்த மூன்று நாள் நீங்கள் மறையுரையைக் கேட்டு கடைசி நாளில் நல்லதொரு ஒப்புரவு அருட்சாதனம் பெற்று நற்கருணையை உட்கொண்டால் சகாய அன்னையின் அருளால் நிச்சயம் மழை பெய்யும் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்" என்று கூறினார். இவ்வாறு கூறிய தொன் போஸ்கோவிற்கே தெரியவில்லை அவர் எப்படி அவ்வாறு சொன்னார் என்று. அவருடைய மறையுரையை கேட்ட மக்களும் நம்பிக்கையோடு இறை இயேசுவைப் பக்தியுடன் உட்கொண்டனர். திருவிழா நாள் அது. எப்போதும்போல் சூரியன் சுட்டெறித்தான். மழை மேகங்களின் வருகைக்கான அறிகுறியும் இல்லை. மாலை நேரமும் வந்தது. தொன் போஸ்கோ சகாய அன்னையின் மீதுள்ள நம்பிக்கையில் அன்றைய கடைசி நாள் மறையுரையை தொடங்கினார். எல்லோரும் ஆவலோடு மழையை எதிர்நோக்கி காத்திருக்க, நேரம் ஆக ஆக தொன் போஸ்கோவின் முகத்தையே பார்த்திருந்தனர். சிறுதுநேரத்திற்குள் வானம் இருண்டு இடியும் மின்னலும் உண்டாகி, கனமழை பெய்தது. மரியன்னை அற்புதமாய் எவ்வாறு அற்புதங்களை தன் வாழ்வில் செய்துவருகிறாள் என்று சொல்லி கண்ணீரோடு அந்த சகாயத்தாயைப் போற்றினார்.

தொன் போஸ்கோ சலேசிய குடும்பத்திற்கு மட்டுமல்ல நம் அனைவருக்கும் மரியன்னையைத் தாயாகவும், பாதுகாவலியாகவும், புதுமைகள் நிகழ்த்துபவளாகவும், துன்ப வேளைகளில் ஆறுதல் அளிப்பவளாகவும் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுபவளாகவும் கொடுத்துள்ளார் என்பதில் மாற்றுகருத்து கிடையாது. மரியன்னை தொன் போஸ்கோவின் வாழ்வில் எவ்வாறு புதுமைகள் செய்தாரோ அதே போன்று நமது வாழ்விலும் செய்ய காத்திருக்கிறாள் என்பதை மறந்துவிடக்கூடாது.

"மரியன்னையின் மீது நம்பிக்கை வைப்போம், அற்புதங்களை காண்போம்"

## 3. அருளாளர் தேவசகாயம் - இன்று தரும் பாடங்கள்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை சுமந்து என்னைப் பின்பற்றட்டும் (மாற் 8:34), என்னும் இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிசாய்த்து பல்வேறு சோதனைகளுக்கும், துன்புறுத்தலுக்கும் ஆளானவர். அவரோடு இறப்போம் (யோவா 11:16) என்ற புனித தோமையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தன் ஆழ்ந்த விசுவாசத்தையும் அசைக்க முடியாத பற்றுறுதியையும் பலகொடிய வேதனைகளிலும் தனது இறுதி மூச்சுவரை பாதுகாத்து சான்று பகர்ந்தவர். காற்றாடி மலைக் கதிரவனாய் இன்று உலகெங்கும் கிறிஸ்தவ நம்பிக்கையின் ஒளிக்கீற்றை பரவ விட்டு உயர்ந்து நிற்கும் மறைச்சாட்சி. அவரே இந்தியாவின் பொதுநிலையினருள் முதல் முத்திபேறு பெற்ற அருளாளர் தேவசகாயம். கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டாலம் என்னும் ஊரில் வாசுதேவன் நம்பூதிரி ரேவதி தம்பதியருக்கு 1712 ஏப்ரல் 23ம் நாள் நீலகண்டன் என்ற தேவசகாயம் பிள்ளை பிறந்தார். இவர் இயல்பிலேயே நல்லவர், நன்கு கற்றுத்தேர்ந்தவர். அவர் முதலில் போர் வீரராகவும், பின்னர் கோவில் பணியாளராகவும் இறுதியாக அரச கருவூலத்தில் பணியாற்றும் அரசவை அலுவரலாகவும் பணியாற்றினார். அவர் தம் நாயர் குலத்தைச் சார்ந்த பார்கவியம்மாள் என்பவரை மணம் முடித்தார்.

சேர நாட்டின் வாணிப நகரமான இரணியை டச்சுக்காரர்கள் கைப்பற்ற 1741ம் ஆண்டு படையெடுத்தனர். குளச்சலில் நடைபெற்ற போரில் மன்னன் மார்த்தாண்டவர்மனின் படைகள், டச்சுக்காரர்களைத் தோற்கடித்து, அப்போது போரில் பிடிபட்ட கைதிகளில் ஒருவர் பெனடிக்ட் டிலனாய் கொடுத்த விளக்கங்கள் நமக்கு ஏற்புடையதாய் உணர்ந்த நீலகண்ட பிள்ளை கிறிஸ்தவராக மாற விரும்பினார். அவரை நன்கு தயாரித்தப்பின் அருள்தந்தை ஜான் பாப்டிஸ்ட் புத்தாரி சே.ச நீலகண்ட பிள்ளைக்கு வடக்கண் குளத்தில் 1745ம் ஆண்டு மேமாதம் 14ம் நாள் லாசர் என்ற பெயரில் திருமுழுக்கு கொடுத்தார். லாசர் என்றால் தமிழில் தேவசகாயம் என்று பொருள். கிறிஸ்தவராக மாறிய இவர், பிறரும் கிறிஸ்தவ நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு அறிவுறித்தினார். அவ்வாறு கிறிஸ்துவத்தை தழுவியவருள் அவரது மனைவியும் ஒருவர். அருட்தந்தை பரஞ்ஜோதி நாதர் அவருக்கு ஞானப்பூ (தெரசா) என்று பெயரிட்டார்.

தாம் ஏற்றுக்கொண்ட புதிய நம்பிக்கையின் காரணத்தால் தேவசகாயம்பிள்ளை சாதி வேறுபாடுகளைக் களைந்தார். பிறப்பால் தாழ்ந்தவர்கள் என்று கருதப்பட்டோருடன் உணவருந்தி அவர்களோடு வாழ்ந்தார்.

கிறிஸ்தவ வாழ்வின் காரணமாக தேவசகாயத்திடம் காணப்பட்ட மாற்றங்களைக் கண்ட உயர் ஜாதியினர் அவர் ஒரு துரோகி எனவும், சமய செயல்பாடுகளை இகழ்பவராகவும், தெய்வங்களையும் அந்தணர்களையும் அரசு அரியணையையும் பழித்துரைப்பவராகவும் குற்றம் சாட்டினர். கிறிஸ்தவர்களுக்கு எதிராய் தூண்டிவிடப்பட்ட மன்னர் 1749 பிப்ரவரி 29ம் நாள் தேவசகாயத்தைக் கைது செய்தான். அவர் தொடர்ந்து பல்வேறு விதங்களில் சித்தரவதை செய்யப்பட்டார். எருமைமேல் அமரச் செய்து, அவமானத்தின் அடையாளமான எருக்கு மாலை அணிவிக்கப்பட்டு, பல்வேறு நகர்கள், ஊர்கள் வழியாக பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார். இத்தகு துன்பச் சூழலிலும் வினவங்கோடு வெட்டு வென்னியில் உப்பு நீரை குடிநீராக மாற்றினார். சுண்ணாம்புச் சூளைமீது நிறுத்தப்பட்டபோது முழந்தாளிட்டு செபித்தவராய் எவ்வித ஆபத்துமின்றி காப்பாற்றப்பட்டார்.

புலியூர் குறிச்சி என்னும் சிற்றூரில் தாகத்தால் தவித்த அவருக்கு பாறையிலிருந்து தண்ணீர் பீரிட்டு வந்தது. பெருவினை என்னும் ஊரில் ஏழு மாதங்களாய் இவரைக் கட்டி வைத்த பட்டுப்போன வேப்பமரம், துளிர்த்து, படர்ந்து செழிப்பாகி நிழலாய் நின்றது, மரண தண்டனை நிறைவேற்றும் ஆராச்சாரியாருக்கு, குழந்தைச் செல்வம் இல்லாத குறையை ஆராச்சாரரின் வேண்டுதலுக்கு இணங்க இறையருளால் குழந்தைச் செல்வம் பெற்றுத்தந்தார். காவலர்கள் அவருக்குக் கொடுத்த நஞ்சு கலந்த உணவு அவருக்கு எந்த நலக்கேட்டையும் தரவில்லை. இறுதியாய் அவர் ஆரல்வாய்மொழி சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். 1752ம் ஆண்டு ஜனவரி 14ம் நாள் இரவில் காற்றாடி மலையில் சுட்டுக் கொல்லப்பட்டார். காட்டு விலங்குகளுக்கு உணவாக வீசப்பட்ட அவரது உடலின் பகுதிகளை கிறிஸ்தவர்கள் தூய பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயப் பீடத்தின் முன்பு அடக்கம் செய்தனர். இவ்வாலயமே இன்றைய கோட்டாறு மறைமாவட்ட பேராலயம் ஆகும்.

**இந்த அருளாளர் இந்திய திருச்சபைக்கு இன்று தரும் பாடங்கள் என்ன?**

நிறமும், இனமும், சமயமும், மொழியும் பிரித்துப் பார்ப்போரை கடிந்து, தகர்த்து இணைக்கும் பாலமாய் பாலன் இயேசு பாருக்கு வந்தது போல் உயரிய நம்பூதிரி குலத்தில் பிறந்து தாழ்த்தப்பட்டோர், குடிக்கும் குவளை முதற்கொண்டு வழிபாட்டுத் தலங்கள் வரை தனித்தனி என்ற காலத்தில் இவரும் அவர்களோடு உணவருந்தினார், வாழ்ந்தார். நவீன உலகத்தில் வாழும் நாம் அவரைப்போன்று முழுமையாக இல்லை என்றாலும், யாவரையும் வெறுத்து ஒதுக்காது, அரவணைத்து அன்பினை பகிர்ந்து கொள்வோம். நட்பிற்கு இலக்கணமாக, டிலனாயுடன் நல்ல நட்பு கொண்டு, நல்லது என்று தமக்கு அறிவுறுத்தியதை ஏற்று மனம் மாறினார், மற்றவர்களையும் மனம் மாற்றினார். விசுவாசத்தில் உறுதிபூண்டார். அவர்போல் நாமும் மனம் மாறுவோம், நண்பன்படும் துன்பத்தைப் பாதியாக்குவோம். துணை நிற்போம், வாழ்வில் நல்விளை நிலமாவோம்.

“உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்” (மத் 5:39, 43-44) என்ற இறைவார்த்தையின்படி வாழ்ந்து காட்டினார் நம் அருளாளர் அனல் பறக்கும் வெயிலில் சூரைமுள் கொண்டு உடலைக் கீற அடித்து, மிளகு பொடியைத் தேய்த்த நிலையிலும், விளவங்கோடு வெட்டு வென்னியில், உப்பு நீரைக் குடிநீராய் மாற்றினார். இந்த அன்பு நிலையே அனைத்திலும் மேலானது, நாமும் நம்மைத் துன்புறுத்துவோரையும், நம்மை வெல்வோரையும் அன்பு செய்வோம். அவர்களுக்கு நிழலாய் இருப்போம். பெருவிளையில் பட்டுப்போன வேப்பமரத்தில் இறுக்கிக் கட்டி வைக்கப் பணித்த ஆராச்சாரருக்காக செபித்து அவருக்கு குழந்தைப் பேற்றைப் பெற்றுத்தந்தார். இந்த இரக்கச் செயல் நமது வாழ்விலும் துளிர்த்து மரமாகட்டும், செழிக்கட்டும்.

அவர் வாழ்ந்த 40 ஆண்டுகளில், 7 ஆண்டுகள் மட்டுமே அவரின் கிறிஸ்தவ வாழ்வு, இந்த 7 ஆண்டுகளிலும் 3 ஆண்டுகள் சிறைச்சாலையில் கொடும் வாதைகள் அனுபவித்தார். அவரின் மாசற்ற திரு இரத்தத்தால் திருச்சபையின் உண்மையையும், உயர்வையும் வெளிப்படுத்தினார். இந்த முதல் இந்திய பொதுநிலையினர், மறைசாட்சிக்கு திருத்தந்தை 16ம் பெனடிக்ட் “அருளாளர்” பட்டம் வழங்கி 2012ம் ஆண்டு டிசம்பர் 2ம் நாள் மேன்மையில் உயர்த்தினார். இறையேசு சொன்னதுபோல், அவர்தம் வாழ்வில் உப்பாக இருந்தார். உப்பைப்போல் கரைந்து அடுத்தவர் வாழ்வில் சுவை சேர்க்கின்ற நல்ல மனிதராகவும், உருகும் மெழுகாக அடுத்தவர் வாழ்வில் ஒளியேற்றி வழிகாட்டுகின்ற நல்ல மனத்தவராகவும் இருந்தார். நாமும் அவரைப்போல் நல்ல மனிதர்களாக இருக்க நம்மையே கரைப்போம், நம்மையே இழப்போம்.

## 4. திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

### இத்தாலியிலேயே மிகப் பெரிய அளவில் கிறிஸ்து பிறப்பு காட்சி

உரோம் நகரின் வில்லரேஜியா (Villaregia) என்ற பகுதியில் மனிதர்களைக் கொண்டு உருவாக்கப்படும் கிறிஸ்துமஸ் குடில் காட்சிகள் பத்தாவது ஆண்டாக இவ்வாண்டும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 18ம் தேதி முதல் சனவரி 6ம் தேதி முடிய நடித்துக் காட்டப்படும் இந்த காட்சிகளில் 150க்கும் அதிகமான நடிகர்கள் பங்கேற்கின்றனர் என்றும், இயேசு பிறந்த காலத்தில் யூதேயா நாடு எவ்விதம் இருந்ததென்பது இக்காட்சிகளில் உருவாக்கப்படும் என்றும் வில்லரேஜியா ஊராட்சி கூறியுள்ளது. உலகெங்கும் சிறுசிறு துண்டுகளாக நிகழும் போர்களைக் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளதை மையப்படுத்தி இவ்வாண்டு நிகழும் கிறிஸ்து பிறப்பு காட்சிகளில் உலகின் அமைதி என்பது மையக்கருத்தாக அமையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாத்திமா அன்னை காட்சியின் நூறாம் ஆண்டுக்கு பரிபூரண பலன்கள்

போர்த்துக்கல் நாட்டு பாத்திமாவில் அன்னை மரியா காட்சி அளித்ததன் நூறாம் ஆண்டுக்கென திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்குவதற்கு தீர்மானித்துள்ள பரிபூரண பலன்களை மூன்று வழிகளில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விளக்கிய பாத்திமா திருத்தல அதிபர் அருள்பணி André Pereira பாத்திமா திருத்தலத்திற்குத் திருப்பயணம் செல்லுதல், பாத்திமா அன்னை திருவுருவத்தின் முன்பாகச் செபித்தல் பாத்திமா செல்ல இயலாதவர்கள் ஆன்மீக முறையில் இதில் பங்கெடுத்தல் ஆகிய மூன்று வழிகளில் இந்தப் பூரண பலன்களைப் பெறலாம் எனக் கூறியுள்ளார். 2016ம் ஆண்டு நவம்பர் 27, ஞாயிறன்று தொடங்கியுள்ள இந்த நூற்றாண்டு நிகழ்வுகள் 2017ம் ஆண்டு நவம்பர் 26ம் தேதி நிறைவடையும். திருத்தந்தை வழங்கும் பரிபூரண பலன்களைப் பெற விரும்புவோர் ஒப்புரவு அருளடையாளத்திற்குச் சென்று திருப்பலியில் கலந்துகொண்டு திரு நற்கருணை வாங்குதல், பாவ வாழ்வை விலக்கி நடத்தல், திருத்தந்தையின் கருத்துக்களுக்காகச் செபித்தல் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டும்.

### போர்ப்பகுதிகளில் ஏறத்தாழ 535 மில்லியன் சிறார் நெருக்கடியில்

உலகில் வன்முறை இடம்பெறும் இடங்களில் ஏறக்குறைய 53 கோடியே 50 இலட்சம் சிறார் அடிப்படை வசதிகளின்றி கடும் துன்ப நிலைகளில் வாழ்கின்றனர் என்று ஐ.நா.வின் குழந்தை நல அமைப்பான யூனிசெப் கூறியது. சிரியாவில் போர் இடம்பெறும் இடங்களில் ஏறக்குறைய ஐந்து இலட்சம் சிறாரும் வட கிழக்கு நைஜிரியாவில் ஏறக்குறைய 10 இலட்சம் சிறாரும் ஏமனில் ஏறக்குறைய ஒரு கோடி சிறாரும் நெருக்கடியான சூழல்களில் வாழ்கின்றனர் என்றும் யூனிசெப் கூறியது. ஆப்கானிஸ்தானில் ஆரம்பப் பள்ளிக்குச் செல்லும் வயதுடைய சிறாரில் பாதிப்பேர் பள்ளிக்குச் செல்லவில்லை எனவும் கூறும் யூனிசெப் போர்ப் பகுதிகளிலும் அமைதி நிலவும் இடங்களிலும் சிறாரின் வளர்ச்சி கேள்விக்குறியாகவே உள்ளது என்றும் யூனிசெப் கவலை தெரிவித்துள்ளது.

### பொருளாதார வளர்ச்சியில் எல்லாத் தரப்பினரும் சேர்க்கப்பட இந்தியப் பிரதமர் நரேந்திட மோடி அவர்களுக்கு இந்தியக் கிறிஸ்தவர்கள் கோரிக்கை

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சமுதாயத்தின் விளிம்புக்கு தள்ளப்பட்ட மக்களை ஒதுக்காமல் எல்லாத் தரப்பினரையும் இணைப்பதற்கு உறுதி வழங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை இந்தியக் கிறிஸ்தவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். இந்தியக் கிறிஸ்தவர்களின் உலகளாவிய அவைத் தலைவர் சாஜன் ஜார்ஜ் அவர்கள் பிரதமர் மோடி அவர்களுக்கு எழுதியுள்ள திறந்த கடிதத்தில் ஊழல் பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மை மதங்களோடு பிரச்சனை போன்ற கடும் விவகாரங்களால் நாடு இரண்டாகப் பிளவுப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் நிலவும் 500, 1000 ரூபாய் தாள்கள் பிரச்சனையின் பாதிப்பையும் சுட்டிக்காட்டியுள்ள சாஜன் ஜார்ஜ் அவர்கள் நாற்பது விழுக்காடு இந்தியர்கள் வங்கிகளைப்பயன்படுத்துவதில்லை எனவும், இந்தப் பிரச்சனையில் ஏழைகளும், சமூகநலப் பணிகளில் பணியாற்றும் நிறுவனங்களும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் கூறியுள்ளார்.

**அருள்பணியாளர்கள் உருவாக்கம் குறித்து புதிய வழிமுறைகள்**

அருள்பணியாளர்கள் சமுதாயப் பணியாற்றும் செயல்வீரர்கள் அல்ல. மாறாக, இறைமக்களுக்கென கடவுளால் அருள்பொழிவு செய்யப்பட்டவர்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ள கருத்தை வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் வத்திக்கான் நாளிதழுக்கு வழங்கிய ஒரு பேட்டியில் நினைவு கூர்ந்துள்ளார். அருள்பணியாளர்களை உருவாக்குதல் குறித்து புதிய வழிமுறைகளை உள்ளடக்கிய ஓர் ஏடு டிசம்பர் 7 அன்று வெளியாகியுள்ளது. "அருள்பணியாளர் அழைப்பு என்ற கொடை" ("The Gift of the Priestly Vocation") என்ற பெயரில் வெளியாகியுள்ள இந்த வழிமுறை ஏடு, 1970 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த மாற்றங்களை உள்ளடக்கி இன்றையச் சூழலுக்கேற்ப வழிமுறைகளை பரிந்துரைக்கிறது.

**உலகின் மிக உயரமான கிறிஸ்துமஸ் மரம் அமைத்தல் நிறுத்தம்**

உலகின் மிக உயரமான கிறிஸ்துமஸ் மரத்தை உருவாக்கும் இலங்கையின் முயற்சி ஏழைகளின் சார்பாக நிறுத்தப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவு என கணக்கிட்டு துவக்கப்பட்ட இந்த பணி பாதி நிறைவேறிக்கொண்டிருந்தபோது இப்பணத்தை வீணடிக்காமல் ஏழை மாணவர்களின் படிப்புக்கும் வறியோருக்கான வீடு கட்டுவதற்கும் செலவழிக்க வேண்டும் என கொழும்பு கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து செயற்கை கிறிஸ்துமஸ் மரம் கட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளதாக அரசு அறிவித்தது. UCAN செய்தி நிறுவனத்தின் கூற்றுப்படி 96 மீட்டர் உயரத்துக்கு கட்டப்பட திட்டமிடப்பட்ட இந்த கிறிஸ்துமஸ் மரத்தின் பணி 18 மீட்டருடன் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது மற்றும் திட்டமிடப்பட்ட செலவில் பாதி அதாவது 60 இலட்சம் ரூபாய் ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது.

**அடுத்த சுடரில்**

**பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி**

ஆண்டவர் ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா
தூய ப்ளேஸ்
தூய அருளானந்தர்
தூய கொன்சாலோ கார்சியா
தூய ஜோஸ்பின் பக்கித்தா
தூய ஸ்கொலாஸ்திக்கா
தூய லூர்தன்னை
தூய சிரில் மற்றும் மெத்தோடியுஸ்
தூய பீட்டர் தமியான்
தூய பேதுருவின் தலைமைப்பீடம்
தூய போலிக்கார்ப்பு
பொதுக்கால ஞாயிறுகள்

**பகுதி 2: விசவாசத்தில் வளர...**

உலக துறவறத்தாரின் நாள் - பிப்ரவரி 2
துறவற வாழ்வின் மேன்மைகள்
திருச்சபை வரலாற்றில் துறவறத்தாரின் பெரும் பங்கு
லூர்தன்னையின் புதுமைகள்

**சுடர் வாசகர் போட்டி 30 முடிவுகள்**

1. எசாயா இறைவாக்கினர்
2. 9ஆம் பத்திநாதர் (பியூஸ்)
3. தூய லூசியா (பிரகாசியம்மாள்)
4. வானத்தூதரைப் போன்று பிரகாசித்தது
5. திருத்தந்தை தூய தாமஸ் பெக்கட்
6. சவோ என்ற சிவப்பு அங்கி
7. யுவான் என் எளிய மகனே, எங்கே போகிறாய்

8. ஆயர் மவுனிப் யூனான்
9. தூய சவேரியார்
10. தூய அம்புரோஸ் அவர்களின் சகோதரி

| தேதி | கிழமை | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ஞாயிறு | கன்னி மரியா இறைவனின் தாய் | I. எண் 6:22-27<br>II. கலாத் 4:4-7 | லூக் 2:16-21 |
| 2 | திங்கள் | புனித பசீல், நசியான் கிரகோரி | 1யோவா2:22-28 | யோவா1:19-28 |
| 3 | செவ்வாய் | இயேசுவின் திருப்பெயர்<br>புனித குரியாகோஸ் எலியாஸ் சவரா | 1யோவா2:29-3:6 | யோவா1:29-34 |
| 4 | புதன் | | 1யோவா3:7-10 | யோவா1:35-42 |
| 5 | வியாழன் | தூய ஜான் நியூமேன் | 1யோவா3:11-21 | யோவா1:43-51 |
| 6 | வெள்ளி | | 1யோவா5:5-13 | மாற்கு 1: 7-11 |
| 7 | சனி | தூய ரெய்மோண்ட் பென்னாபோர்த் | 1யோவா5:5-6,8-13 | யோவா2:1-11 |
| 8 | ஞாயிறு | ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா | I. எசா 60: 1-6<br>II. எபேசி 3: 2-3அ.5-6 | மத் 2:1-12 |
| 9 | திங்கள் | ஆண்டவரின் திருமுழுக்கு விழா | I. எசா 42:1-4, 6-7<br>II. திப 10:34-38 | மத் 3:13-17 |
| 10 | செவ்வாய் | | எபி 2:5-12 | மாற்கு 1:21-28 |
| 11 | புதன் | | எபி 2:14-18 | மாற்கு 1:29-39 |
| 12 | வியாழன் | | எபி 3:7-14 | மாற்கு 1:40-45 |
| 13 | வெள்ளி | தூய ஹிலாரி | எபி 4:1-5,11 | மாற்கு 2:1-12 |
| 14 | சனி | | எபி 4:12-16 | மாற்கு 2: 13-17 |
| 15 | ஞாயிறு | ஆண்டின் 2ம் ஞாயிறு | I. எசா 49:3.5-6<br>II. 1கொரி 1:1-3 | யோவா 1: 29-34 |
| 16 | திங்கள் | தூய ஜோசப்வாஸ் | எபி 5:1-10 | மாற்கு 2: 18-22 |
| 17 | செவ்வாய் | தூய வனத்து அந்தோணியார் | எபி 6:10-20 | மாற்கு 2: 23-28 |
| 18 | புதன் | | எபி 7:1-3,15-17 | மாற்கு 3: 1-6 |
| 19 | வியாழன் | | எபி 7:25-8:6 | மாற்கு 3: 7-12 |
| 20 | வெள்ளி | தூய /பபியான், தூய செபஸ்தியார் | ஏபி8:6ஆ-13 | மாற்கு 3: 13-19 |
| 21 | சனி | தூய அஞ்ஞேஸ் | எபி 9:2-3:11-14 | மாற்கு 3: 20-21 |
| 22 | ஞாயிறு | ஆண்டின் 3ம் ஞாயிறு | I. எசா 9:1-4<br>II. 1கொரி 1:10-13,17 | மத் 4: 12-23 |
| 23 | திங்கள் | | எபி 9:15,24-28 | மாற்கு 3: 22-30 |
| 24 | செவ்வாய் | தூய பிரான்சிஸ் சலேசியார் | எபி 10:1-10 | மாற்கு 3: 31-35 |
| 25 | புதன் | திருத்தூதர் பவுல் மனமாற்றம் | திப. 22:3-16 | மாற்கு 16: 15-18 |
| 26 | வியாழன் | தூய திமோத்தி, தூய தீத்து | 2திமொ1:1-8 | மாற்கு 4: 21-25 |
| 27 | வெள்ளி | தூய அஞ்ஞெலா மெரிசி | எபி 10:32-39 | மாற்கு 4: 26-34 |
| 28 | சனி | தூய தாமஸ் அக்குவினாஸ் | எபி 11:1-2, 8-19 | மாற்கு 4: 35-41 |
| 29 | ஞாயிறு | ஆண்டின் 4ம் ஞாயிறு | I. செப் 2:3,3:12-13<br>II. 1கொரி 1:26-31 | மத் 5: 1-12அ |
| 30 | திங்கள் | | எபி 11:32-40 | மாற்கு 5:1-20 |
| 31 | செவ்வாய் | தூய தொன் போஸ்கோ | எபி 12: 1-4 | மாற்கு 5: 21-43 |

11. 1531 டிசம்பர் 9
12. தூய அவிலா தெரேசா, கார்மேல் சபை
13. திருத்தூதர் தூய யோவான்
14. திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் 1893ஆம் ஆண்டு
15. மகாத்மா காந்தி

**சரியான விடையெழுதி பரிசு பெறும் வெற்றியாளர்கள்**

D. பிரான்சிஸ் சேவியர், வேலூர்

G. கிறிஸ்டோபர், தருமபுரி

Sr. ஞானசெல்வம், மதுரை